Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.
Case No. **CC No.166/2025**
**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : திரு.நாகராஜ் |
| Father/Husband Name | : திரு. கேசவன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கூவத்தூரில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 03.02.2021ம் தேதி மாலை 6.30 மணியளவில் இ சி ஆர் சாலை கூவத்தூர் விலாமரம் பஸ் ஸ்டாப் அருகே நான் எனது ஆட்டோவில் சென்றுக் கொண்டிருந்த போது கும்பலாக வந்து என் ஆட்டோவை மடக்கினார்கள். அந்த கும்பலில் இருந்து யாரோ என்னை பார்த்து அசிங்கமாக பேசி என்னிடம் தகராறு செய்து அவரது ஆட்டோவில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து உடைத்து எனது இடது பக்க முகத்திலும், பின்புற முதுகிலும் குத்திவிட்டும், மேலும் அவர் ஆட்டோவில் இருந்த இரும்பு ராடை எடுத்து எனது தலையின் பின்னால் அடித்தார். மேலும், என்னை பார்த்து கொன்றுவிடுவதாக மிரட்டினார். எனக்கு பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். யார் அவ்வாறு செய்தார்கள் என்று

தெரியாது. இதுகுறித்து அனுமானத்தின் அடிப்படையில் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. (**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 03.02.2021ம் தேதி மாலை 6.30 மணியளவில் இ சி ஆர் சாலை கூவத்தூர் விலாமரம் பஸ் ஸ்டாப் அருகே நான் எனது ஆட்டோவில் சென்றுக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி சீனிவாசன் அவரது ஆட்டோவை என்னுடைய ஆட்டோவில் முன் நிறுத்தி என்னை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அவர் ஆட்டோவில் இருந்து பீர் பாட்டிலை எடுத்து உடைத்து எனது இடது பக்க முகத்திலும் பின்புற முதுகிலும் குத்தினார் என்றால் சரியல்ல. மேலும் அவர் ஆட்டோவில் இருந்த இரும்பு ராடை எடுத்து என் தலையின் பின்பக்கம் அடித்தார் என்றால் சரியல்ல. மேலும் என்னை கொன்றுவிடுவதாக மிரட்டினார் என்றால் சரியல்ல. மேலே சொன்ன விவரங்களை புகார் வாக்குமூலத்திலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.